திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கேட்ட கேள்விக்கு இன்னும் சரியான விடை வரவில்லை. ஒரு ஆஸ்பத்திரிக்குள் கட்டப்பட வேண்டிய கட்டிடம் கட்டுவதிலே இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது தேவைதானா ? அங்கே 1500-க்கு மேற்பட்ட 'இன் பேஷன்ட்ஸ்' படுத்துக்கொண்டிருக்கிற ஆஸ்பத்திரியில் துரிதமாகக் கட்ட வேண்டிய கட்டடத்தைக் கட்டாமல் வருஷக்கணக்கில் நீட்டிக்கொண்டு போவது, பொதுப்பணித் துறை கட்டுமானப் பணியில் கவனம் செலுத்தாமல் இருப்பதும ஏனோ தானோ என்று நடவடிக்கையும் தானே காரணம். அந்தக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்தி, ஆஸ்பத்திரி என்ற முறையில் எமர்ஜென்சி கண்ணோட்டத்தோடு பார்த்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நேற்று கூட வினா நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபோன்ற பல்வேறு புகார்கள் கடந்த காலத்தில் வந்திருக்கின்றன. இந்தக் கட்டடப்பணி தொடங்கப்பட்டு விரைவாக வேலை நடக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. நானும் பொதுப்பணித் துறை அமைச்சருடன் கலந்து பேசி, இந்தப் பணியை விரைவில் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்து, இதைப்போன்று ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை விரைவாக முடிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவாக முடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் இப்படிப்பட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு, ஆங்காங்கே சென்று, நேரில் பேசி, நேரடியாகக் குறிப்புகளைப் பெற்று, இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

126—(*வினா எண் 38)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிய திட்டங்கள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விரம் என்ன ?

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட ஐந்து முக்கிய திட்டங்கள் மைய அரசின் அனுமதிக்கு அனுபபப்பட்டு அதன் பரிசீலனையில உள்ளன.

1. சண்முகாநதி புனல் மின்திட்டம் ..30 மெகாவாட்
2. பவானிகட்டளை முதற்கட்ட புனல் மின்திட்டம். ..90 மெகாவாட்
3. பரலையாறு புனல்மின் திட்டம் ..25 மெகாவாட்
4. கடலூர் அனல் மின் திட்டம் ..630 மெகாவாட்
5. வடசென்னை 2-வது (கட்ட) அனல் மின்திட்டம். ..420 மெகாவாட்

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 5 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பபபட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவததிருக்கிறார்கள். இன்றையதினம் தமிழ் நாட்டில மின்சாரத் தட்டுப்பாடு எந்த அளவுக்குப் பயங்கர மாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதைப் போக்கு வதற்குத தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தத திட்டங்கள் ஒப்புதலுக்காக எப்போது அனுப்பப்பட்டன என் பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் பொறுப்பில் உள்ள அனைத்து மின் திட்டங்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கக் கூடிய மின்சாரம் சரியான முறையில் கிடைககாத காரணத் தால் இப்போது தமிழ்நாட்டில மின்வெட்டு தட்டுப்பாடு ஏற் பட்டு இருக்கிறது. இது குறித்து ஏற்கெனவே அறிவித்திருக் கிறோம். இன்றைக்கு மத்திய அரசு அனுமதித்து நாம் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கிற வடசென்னை அனல் மின் திட்டம். மேட்டூர் அனல மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை விரிவாக்கும் திட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களும சேர்ந்து 1440 மெகாவாட் என்ற அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும். உடனடியாக இந்த ஆண்டு இறுதிக்குள் மேட்டூரும், தூத்துக்குடியும் உற்பத்தியைத் துவங்கிவிடும். வடசென்னை அனல் மின் திட்டத்தையும் கூடிய விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம். அதுபோல் மத்திய அரசு அனுமதி அளித்து கொல் கிடைக்காத காரணத் தால் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுக்க முடியாமல்

9-வது திட்டத்தில் எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு அந்த வகையில இரண்டு மின் திட்டங்கள் இருக் கின்றன. கடலூர் அனல் மின் திட்டம் 3X210 அதாவது மொத் தம் 630 மெகாவாட் திட்டம், வடசென்னை இரண்டாவது திட்டம் 2X210 அதாவது மொத்தம் 420 மெகாவாட் திட்டம் ஆகியவையே அவையாகும்.

அதேபோல் வேலை முடிந்து இந்த ஆண்டு இறுதியிலிருந்து அதாவது புனல் மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியை ஆங் காங்கு சிறு, சிறு அளவில் பெற இருக்கிறோம். பைக்காரா மைக்ரோ திட்டத்திலிருந்து 2 மெகாவாட்டும், வைகை மைக்ரோ திட்டததிலிருநது 6 மெகாவாட்டும், கீழ்பவானி மைக்ரோ திட்டத்திலிருநது 8 மெகாவாட்டும் என்ற வகையில் விரைவில் நமக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். நன்றி. ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் நீர் மின் திட்டங்கள் அல்லது அனல் மின் திட்டங் களாகத் தான் இருக்கின்றன. கடல் நீரிலிருந்து மின் சாரம் தயாரிப்பதாகச் சொல்லப்பட்டது. அதுகுறித்து நம் முடைய அரசு ஆய்வு செய்திருக்கிறதா, ஆய்வு செய்யுமா, அதன் நிலை என்ன என்பதையும் நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய திட்டம் இன்னும் ஆய்வில்தான் உள்ளது. ஆனால் நீர்மின் திட்டங் களைப் பொறுத்தவரையில் பருவமழை பொய்த்த காரணத் தால் அவை சரியானபடி செயல்பட முடிவதில்லை. அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில சரியானபடி கோல் கிடைக்கவில்லை. அதனால் பேசின்பிரிட்ஜ் எரிவாயு சுழல் மின் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். அதேபோன்று சிறிய மின்திட்டமான வாயுமின் திட்டம் கோவல்களப்பாலின் என்ற இடத்தில் 5 மெகாவாட் மின்திட்டமாக ஆரம்பிக்க இருக்கிறோம். அதுபோல் காற்றாலை மின் திட்டம் ஆங் காங்கு நிறுவப்பட்டு, அதாவது முல்லைக்காடு என்ற இடத் திலும், கயத்தாறு என்ற இடத்திலும், புளியங்குளம் என்ற இடத்திலும், சுல்தான்பேட்டை என்ற இடத்திலும் நிறுவப்பட்டு சிறிய அளவில் மின் உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே காற்றாலையை பெரிய திட்டமாக கயத்தாறு என்ற இடத்தில் 6 மெகாவாட் திட்டமும், முப் பந்தல் என்ற இடத்தில் 4 மெகாவாட் திட்டமும் உற்பத்தி செய்து மின்சாரத்தைத் தர இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.